# தமிழமுது

தமிழ் மொழித்திறன் - I

(2020 - 2021 ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

முதற்பருவம்


தொகுப்பாசிரியர்

முனைவர் க.தனலட்சுமி

தமிழ்த்துறை

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி

பொள்ளாச்சி

Language: Tamil

**Tamizhamuthu** - Tamil Mozhiththiran - I

**Semester - I**

(Admission from 2020 - 2021 Academic year)

Tamil Department

Editor: Dr. **K. Dhanalakshmi**

Nallamuthu Gounder Mahalingam College, Pollachi.

First Edition : September, 2020

Copyright : Publisher

No.of Pages : 182

Publisher:

**New Century Book House Pvt. Ltd.,**

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 050.

Tamilnadu State, India.

Email: info@ncbh.in

Online: www.ncbhpublisher.in

ISBN: 978 - 81 - 234 - 4011 - 8

Code No. A 4364

**₹ 230/-**

**Branches**

**Ambattur (H.O.)** 044- 26359906, **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Tanjore** 04362-231371 **Tirunelveli** 0462-4210990, 2323990 **Madurai** 0452-2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 04343-234387 **Ooty** 0423-2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Nagercoil** 04652-234990

**தமிழமுது** தமிழ் மொழித்திறன் - 1

**முதற்பருவம்**

(2020 - 2021 ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

தமிழ்த்துறை

தொகுப்பாசிரியர்: முனைவர் **க.தனலட்சுமி**

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

முதல் பதிப்பு : செப்டம்பர், 2020

*அச்சிட்டோர்:* ***பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,***

*16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14*

**☎: 044 - 28482441**

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

III. உரைநடை

1. தமிழுக்குத் தடம் கண்ட தொல்காப்பியம்
   - முனைவர் பொ.மா.பழனிசாமி

2. எட்டுத்தொகை நூல்களில் நிர்வாகத்திறன்
   - முனைவர் இரா. விஷ்ணுப்ரியா

3. காப்பியங்கள் காட்டும் தனிமனித வாழ்வியல்
   - முனைவர் ந.பிரகாஷ்

4. தமிழர்களின் மரபுவழி விழாக்கள்
   - முனைவர் ம.சித்ரகலா

5. தமிழ் இலக்கியத்தில் கோயிற்கலைகள்
   - பேரா. அ.மகபூபு

6. வேளாண்மையில் மரபும் மாற்றமும்
   - முனைவர் இரா. ஜெயந்தி

7. தற்கால இலக்கியங்களில் தலித்தியம்
   - முனைவர் பே.மஹேஸ்வரி

8. நவீன ஊடக விளம்பரங்களின் நோக்கும் போக்கும்
   - பேரா. ர.சூர்யா

9. சிறுகதைகள் சித்திரிக்கும் பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள்
   - முனைவர் த. கீதாஞ்சலி

# 5. தமிழ் இலக்கியத்தில் கோயிற் கலைகள்

- பேரா. அ.மகபூபு

பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் பல்வகைக் கலைகள் செழித்தோங்கி வளர்ந்துள்ளன. ஓவியம், இசை பற்றிய பல குறிப்புகள் மூத்த இலக்கண நூலான தொல்காப்பியத்தில் காணப்படுகிறது.

"ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர் விக்கும் என்னம்மை
தூய உருப் பளிங்கு போல்வாள்"

என்பதன் மூலம் கலைகள் அறுபத்தி நான்கு என்பதனையும் கலைகளுக்கு எல்லாம் 'கலைமகள்' தெய்வமாக இருக்கிறாள் என்ற கருத்தை அறிய முடிகிறது. தமிழர் வாழ்வோடு கலைகள் பின்னிப் பிணைந்தவை. மனித வாழ்க்கைக்குப் பயன்படுகிற எல்லாத் தொழில்களும் கலைகளே. ஆனால் இந்தக் கலைகள் பொதுக் கலைகள், இவை நுண்கலைகள் ஆகா. அழகுக் கலைகளை ஐந்து வகையாகக் கூறுவர், அவை கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என்பவை ஆகும். கலைகளின் காப்பகங்களாகத் திகழ்பவை கோயில்கள். அக்கோயில் கலையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**அழகுக்கலைகள்**

கலைகளை அழகுக்கலை (அ) நற்கலை, இன்கலை, கவின்கலை என்று கூறுவர். அழகுகக்கலையில் கட்டடக்கலையையும், சிற்பக் கலையையும் ஒன்றாக இணைத்து இரண்டையும் சிற்பக்கலை என்றே கூறினார்கள். நம்முடைய சிற்பக்கலை நூல்களிலே கட்டடமும் சிற்பமும் சிற்பக்கலை என்றே கூறப்படுகின்றன. ஆனால் இரண்டும் தனித்தனி கலைகளாகும்.

காவியத்துடன் நாடகம் அடங்கும் அழகுக்கலைகளில் இசைக்கலை, காவியக்கலை, இரண்டையும் பண்டையத் தமிழர் இயல், இசை, நாடகம் என மூன்றாகப் பிரித்தனர். அவர்கள் இயற்றமிழ் என்று கூறியது காவியக்கலையை செய்யுள் நடையிலும் வசன நடையிலும் காவியம் அமைப்பது இயற்றமிழ். செய்யுளை இசையோடு பாடுவது இசைத்தமிழ். இயலும், இசையும் கலந்து ஏதேனும் கருத்தையோ, கதையையோ, தழுவி வருவது நாடகத்தமிழ் எனப்பட்டது. நாடகத் தமிழில் நடனம், நாட்டியம், கூத்து என்பனவும் அடங்கும். எனவே அழகுக்கலை ஐந்தையும் விரித்துக் கூறுமிடத்து அவை கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, கூத்துக்கலை, காவியக்கலை, நாடகக்கலை என ஏழாகக் கூறுவர்.

கட்டடக்கலை

கட்டடக்கலையில் வீடுகள், மாளிகைகள், அரண்மனைகள், கோயில்கள் இவை அனைத்தும் அடங்கினாலும் இவற்றில் கோயில் கட்டடங்களே சிறந்து விளங்குகின்றன. இவற்றில் கோயில்கள் கட்டடம், ஓவியம், சிற்பம் ஆகியவை சேர்ந்ததாக அமைகின்றன. ஆதிகாலத்தில் செங்கல், மரம், சுண்ணாம்பு முதலிய பொருள்களைக் கொண்டு கோயில் கட்டடங்களை அமைத்தார்கள். சான்றாக கடைச்சங்க காலத்தின் இறுதியில் இருந்த கடியலூர் 'உருத்திரங்கண்ணனார்' சிதைந்து போன (இட்டிகை) செங்கற் கட்டடக் கோயிலைக் கூறுகிறார்.

"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து
எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாம் புன்றிணை" (அகநானூறு: 167)

என்ற அகநானூறு வரிகள் சான்று பகர்கின்றன. கடைச் சங்க காலத்தின் இறுதியில் ஏறத்தாழ கி.பி. 300இல் வாழ்ந்திருந்த சோழன் செங்கணான் என்னும் அரசன் திருமாலுக்கும் சிவபெருமானுக்கும் எழுபது கோயில்களைக் கட்டினான் என்று திருமங்கையாழ்வார் கூறுகிறார்.

"இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோ ளீசற்கு
எழில் மாடம் எழுபதுசெய் துலகமாண்ட
திருக்குலத்து வளச்சோழன்" (திருமங்கையாழ்வார்)

இவருக்கு முன்பு இருந்த அப்பரும், ஞானசம்பந்தரும் தம்முடைய தேவாரங்களிலே செங்கட் சோழன் பலகோயில்களைக் கட்டினான் என்று கூறுகிறார்கள். செங்கட் சோழன் கட்டின கோயில்களில் சில மாடக் கோயில்களாக அமைந்திருந்தன. மாடக்கோயில்கள் என்பது மாடிக்கோவில்கள் ஆகும். இவை இரண்டு நிலை மூன்று நிலைகள் உள்ள மாடக் கோயில்களும் அக்காலத்தில் இருந்தன. செங்கற்கள் இல்லாமலே முழுவதும் மரங்களை மட்டும் கொண்டு கோயில் அமைக்கப்பட்டதும் உண்டு, அவை சேர நாட்டில் பழங்காலத்தில் மரங்களினால் அமைக்கப்பட்ட கோயில்கள் பல இருந்தன. ஆனால் அவைகள் தட்ப வெப்பங்களுக்குத் தாங்காமல் விரைவில் அழிந்து போயின. மேலும் எளிதில் தீப்பிடித்து எரிந்து போகவும் செய்தன. ஆதலால் மரக்கட்டடங்களாக இருந்த சில கோயில்கள் பிற்காலத்தில் கற்றளிகளாக மாற்றிக் கட்டப்பட்டன. சிதம்பரம் கோயிலின் பழைய கட்டடங்களும் அங்குள்ள 'ஊர்த்தவ தாண்டவமூர்த்தி' கோயிலும் ஆதிகாலத்தில் மரக்கட்டடங்களாக இருந்தவை. பிற்காலத்தில் கருங் கற்களினால் கற்றளியாகக் கட்டப்பட்டன. 'திருக்குற்றாலத்துச் சித்திர சபைக் கோயில்' பழங்காலத்தில் மரத்தினால் அமைக்கப்பட்டிருந்தது.

**பாறைக் கோயில்கள்**

பாறைக் கற்களைக் குடைந்து குகைக் கோயில்களைப் புதுமையாக முதன் முதலில் தமிழ்நாட்டில் அமைத்தவன் கி.பி. 7ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்த மகேந்திரவர்ம பல்லவன். கி.பி.600 முதல் 630 வரையில் இராச்சியத்தை அரசாண்ட இவன் வரலாற்றிலே முதலாம் மகேந்திரவர்மன் என்று கூறப்படுகிறான். இவன் மலைப் பாறைகளைக் குடைந்து குகைக்கோயிலை முதன் முதலாக மண்டகப்பட்டு என்னும் ஊரில் இவன் அமைத்த குகைக்கோயிலை சாசன எழுத்தினால் அறிய முடிகிறது.

அக்கோயில் தென் ஆர்க்காடு மாவட்டம் விழுப்புரம் தாலுகா இரயில் நிலையத்திலிருந்து வடமேற்கே பதின்மூன்று கல் தொலைவில் மண்டகப்பட்டு இருக்கிறது. இவ்வூரின் மேற்கில்

அரைக்கல் தொலைவில் உள்ள பாறைக்குன்றின் வடக்குப்பக்கத்தில் இந்தக் குகைக்கோயில் அமைந்திருக்கிறது. இக்கோயில் சுவரில் எழுதப்பட்டுள்ள வடமொழிச் சுலோகம் இந்தச் செய்தியைக் கூறுகிறது.

"செங்கல், சுண்ணம், மரம், உலோகம் முதலியன இல்லாமலே பிரம, ஈசுவர, விஷ்ணுக்களுக்கு விசித்திர சித்தன் என்னும் மகேந்திரவர்மன் இந்தக் கோவிலை அமைத்தான்."

இக்குகைக் கோயில்கள் சென்னைக்கு அடுத்த பல்லாவரத்திலும் காஞ்சிபுரத்துக்கு அடுத்துள்ள பல்லவபுரத்திலும் மகாபலிபுரம், சாளுவன் குப்பம், திருச்சிராப்பள்ளி, மகேந்திரவாடி, சீயமங்கலம், மேலைச்சேரி, வல்லம், மாமண்டூர், தளவானூர், சித்தன்னவாசல் முதலான இடங்களிலும் பாறைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட குகைக் கோயில்களைக் காணலாம். கோயில்களில் இவை மற்றும் அல்லாமல் கற்றளிகள் என்று சொல்லப்படும் கருங்கற்களை அடுக்கிக்கட்டும் கோயில்கள் அணைக்கட்டுகள் போன்றவையும் காணப் படுகின்றன. மாடக்கோயில்கள் என்று சொல்லப்படும் மாடிமேல் மாடியமைத்த கோயில்கள் அரண்மனைகள் என்பவையும் நம் தமிழர்களின் கட்டடக் கலைக்குச் சான்றுகளாக உள்ளன. இன்றளவும் மாடக்கோயில்கள், கட்டடங்கள் உருவாகிக் கொண்டிருப்பது நம் முன்னோர்களின் வழியில் வந்த பயன்பாடேயாகும்.

இக்கோயில் கலைக்கு இன்றுவரை சான்றாக விளங்குவது தஞ்சை பெரியகோயில்.

**சிற்பக்கலை**

கலைகளில் சிற்பக்கலையும் ஒன்று. மண், மரம், செங்கல், கல், உலோகம், தந்தம், மெழுகு, அரக்கு முதலியவற்றைக் கொண்டு உருவங்களை அமைக்கும் கலையே சிற்பக்கலை ஆகும்.

**"வழுவறு மரனும் மண்ணுங் கல்லும்**
**எழுதிய பாவை..........."** - (மணிமேகலை: 21 : 115)

**"மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும்**
**கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க"** - (மணிமேகலை : 21 : 125)

என்ற மணிமேகலை வரிகள் சான்று பகர்கின்றன.

சங்க காலத்தில் வீரக்கல் (அ) நடுகல் என்பது போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரனுக்குக் கல் நடுவது பழந்தமிழரின் வழக்கம். மாண்ட வீரனது உருவம் அக்கல்லில் பொறிக்கப்படும். இப்பழக்கம் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தொன்றுதொட்டு வந்த பழக்கமாகும். கி.பி. 2ஆம் நூற்றாண்டில் செய்யப்பெற்ற சிலப்பதிகாரத்திலும் கண்ணகி என்னும் பத்தினிக்கு உருவம் பொறித்த வரலாறு கூறப்படுகிறது.

**வழிபாட்டு உருவச் சிலைகள்**

பேரூர்களில் சிவன், முருகன், திருமால், பலதேவன், கொற்றவை, சூரியன், சந்திரன் முதலிய பல தெய்வங்களுக்குள் இந்திரனது வெள்ளை யானைக்கும் கோயில்கள் இருந்தன.

**"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்**
**அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்**
**..................................................................**
**..................................................................**
**மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்"** - (சிலப்பதிகாரம்: 5: 170)

என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

நம் கோயில்களிலேயே சிற்பக்கலை பெரிதும் இடம் பெற்றிருக்கிறது. சிற்ப உருவங்கள் அமையாத கோயில் கட்டடங்களே இல்லை. கோயிலின் தரை, சுவர், சிகரம், கோபுரம், மண்டபம், தூண்கள், வாயில் நிலைகள் போன்ற கட்டடங்களின் எல்லா இடங்களிலும் சிற்ப உருவங்கள் அமைந்துள்ளன.

சிற்ப உருவங்களை முழு உருவங்கள் என்றும் புடைப்புச் சிற்பங்கள் என்றும் இரு விதமாகப் பிரிக்கலாம். முழு உருவச் சிற்பம் என்பது முன்புறம், பின்புறம் முதலிய முழு உருவமும் தெரிய அமைக்கப்படுவது. புடைப்புச் சிற்பம் என்பது பொருள்களின் ஒரு புறம் மட்டும் தெரியும்படிச் சுவர்களிலும் பலகைகளிலும் அமைக்கப்படுவது. இவ்விரண்டுவித சிற்ப உருவங்களும் கோயில்களிலே அமைக்கப்படுகின்றன.

நம் நாட்டுச் சிற்பக்கலை சமயத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றிருக்கிறது. ஆகவே தெய்வ உருவங்கள் சிற்பக்கலையில் பெரிதும் முதன்மை பெற்று உள்ளன. இத்திருவுருவங்கள் குறிப்புப் பொருளைப் புலப்படுத்துகின்றன. கடவுள் எங்கும் பரந்து இருக்கிறார் என்பது எல்லாச் சமயத்தவரின் கொள்கையாகும். இதைச் சைவரும் வைணவரும் தன் கடவுள் உருவத்தில் அமைத்துக் காட்டி இருக்கிறார்கள். கடவுள் உருவங்களுக்கு நான்கு (அ) எட்டுக் கைகளை அமைத்துக் காட்டியிருக்கிறார்கள். அதாவது திசைகள் நான்கு, எட்டு என்று கூறுவது மரபு ஆகையால் கடவுள் எல்லாத் திசைகளிலும் பரந்து இருக்கிறார் என்றும் இதுபோன்று மற்ற குணங்களுக்கும் குறிப்புப் பொருளைக் கற்பிக்கின்றன. தெய்வ உருவங்களைப் பற்றி 'காமிக ஆகம சாத்திரம்' முதலிய நூல்கள் விளக்குகின்றன.

**கோயில்களைக் கட்டிய சிற்பிகள்**

கருங்கற்களிலேயே பார்ப்பவரைச் சொக்கிவிழச் செய்யும் அழகும், உணர்ச்சியும் கவர்ச்சியும் மிகுந்த சிற்பங்களைச் செதுக்கியிருக்கும் திறமை வாய்ந்த சிற்பிகள் இறைவனின் அழகே இயற்கை, இயற்கையின் அழகே ஆன்மா என்று கூறுபவர்கள். ஆன்மாவின் அழகை சிற்பத்தில் செதுக்குபவர்கள். இத்தகைய கலைஞர்கள் இறைவன் உணர்வில் தோய்ந்தவர்கள் அவர்கள். தெய்வச் சிலை உருவைச் செதுக்குவதைச் சிறந்த தொழில் எனக் கொண்டவர்கள். சிற்ப நூல்களையும் ஆகம சாத்திரங்களையும் பயின்ற யோகிகள். சான்றாக முருகனின் உருவத்தை செதுக்க சிற்பி ஒருவன் முருகனின் உருவ வர்ணனை உள்ள பாடல்களை பல ஆண்டுகள் படித்து தியானித்து தியானத்தில் முருகனாகவே மாறிய சிற்பி உளியைக் கையில் எடுப்பான். அவனை அறியாமலே உளி அவ்வுருவத்தைப்பெற செதுக்குவான். "நடராஜனின் வடிவை வெண்கலத்திலே செதுக்கிய சிற்பியும் இதே விதமான யோக முறையை அனுஷ்டித்தவனே" என்கிறார் சீனி வேங்கடசாமி (அழகுக்கலை பக்: 106). பாரதநாட்டு மன்னர்கள் இத்தகைய சிற்பிகளைப் போற்றி ஆதரித்தனர்.

**கோயில் கலைக்குச் சான்றாக விளங்கும் கோயில்கள்**

இறைவனையே இயற்கையாகக் காணவேண்டும் என்ற சிற்பிகள் தங்கள் தாய்நாடு எங்கும் கோயில்களைக் கட்டினர். அவை மாமல்லபுரத்துப் பல்லவ சிற்பங்கள், பூனாவிலிருந்து பம்பாய்க்குச் செல்கின்ற வழியில் உள்ள காளிகுகைகள், பம்பாயின் அண்மையில் உள்ள வாணபரத் தீவின் சிற்பங்கள், தஞ்சைப் பெரியகோயில், நிஜாம் சமஸ்தானம் போன்ற பலவும் சான்று பகர்கின்றன. இன்றைய கட்டடக்கலை வளர்ச்சியின் புதுமைக்கு நம் தமிழரின் பழமையான கலையே ஆகும். எனவே பண்டைய தமிழரின் பெருமையைப் போற்றுவோம்.